பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28.

" முயற்சி திருவினை யாக்கும் "

தொகுதி 25 | சார்வரி ௵ ஆவணி மீ 1960 ஆகஸ்டு மீ | பகுதி 5

பொருளடக்கம்

பக்கம்

பத்திரர்திபர் குறிப்புகள் ... 95

பாரத நாட்டில் பாலர் கல்வி ... 97

தெனலிராமன் ... 99

குருவையர் வாழ்க்கைச் சிறப்பு ... 101

உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2.00 தனிப் பிரதி 25 ந.பை.

GOVERNMENT ORDERS

Department of Health, Education and Local Administration

(EDUCATION)

Amendments to rules for grant of recognition and aid to elementary schools.

G.O. Ms. No. 1329, Education, dated 23rd June 1959.

S.R.O. No. C-113 of 1959.

The following amendments shall be made to the rules for the grant of recognition and aid to elementary schools published with late Education Department Notification No. 243, dated the 21st August 1939, at pages 556-568 of Part I-B of the Fort St. George Gazette, dated the 29th August 1939, as subsequently amended :—

AMENDMENTS

In the said rules, under the heading "Chapter I—Rules for recognition", rule 13 (1) shall be renumbered as rule 13(1)(i) and after rule 13(1)(i) as so renumbered, the following shall be inserted, namely :—

"(ii) No qualified teacher shall be appointed in a permanent vacancy on a temporary basis or for a stipulated period. All appointments in permanent vacancies shall be made only on probation for a period of one year, but the management may before the expiry of that period extend it to a further period not exceeding twelve months for reasons to be approved by the Deputy Inspector of Schools. In the absence of any such extension, the teacher shall be deemed to have completed his probation satisfactorily and be confirmed or deemed permanent from the date of completion of probation. A teacher whose probation is extended shall be deemed to have satisfactorily completed his probation at the end of such extended period unless his services are terminated after following the procedure laid down in sub-rule (2) before the last day of the period of probation and he shall be confirmed or deemed permanent from the date of completion of probation.

(iii) In the case of aided elementary schools which are granted permanent recognition, the number of teachers employed at that time shall represent the number of permanent posts and any vacancy which arises in permanent posts shall be considered as a permanent vacancy for the purpose of clause (ii) above. If schools with temporary recognition consisting of Standards I to V or I to VIII or VI to VIII or I to III recognized as feeder schools are allowed to continue beyond one year, the teachers employed in them may be considered as probationers from the date of their appointment in the school.

(iv) Appointment in vacancies arising out of bifurcation of standards of elementary schools shall be made on a temporary basis and a teacher appointed in such a vacancy shall be continued in service so long as there is need for the continuance of sections unless his services are terminated after following the procedure laid down in sub-rule (2). However, if a teacher appointed in such a vacancy is continued in service for three years, he shall be confirmed or deemed permanent from the date of completion of three years of service.

NOTE.—(1) The broken periods of service under the same management shall count for purpose of three years' time referred to in this clause.

(2) Appointments in leave vacancies shall be made on temporary basis."

P. K. HANUMANTHA RAO,
Deputy Secretary to Government.

(True Copy)

பாலர் கல்வி

தொகுதி 25 | சார்வரி ஹூ ஆசஸ்டு மீ 1960 ஆவணிமீ | பகுதி 5

பத்திராதிபர் குறிப்புகள்

மூன்றும் ஐந்தாண்டு திட்டம்

ஐந்தாண்டு திட்டங்கள் நம் நாட்டின் முன்னேற்றத்திற்காகக் கொண்டு வரப்படும் திட்டங்கள். ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் கல்வியைப் பொருத்தது. கல்வி தேசீய மயமாக இருத்தல்வேண்டும். "தேசீயக் கல்வி" என்ற பேச்சு சுதந்திரத்திற்குப் பிறகு குறைந்துவிட்டது. சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு வந்த நாளில் தேசீயக் கல்வியை அடிப்படையாக வைத்து போராட்டம் நடத்த முற்பட்ட தலைவர்கள் பலர் உண்டு. ஆனுல், சுதந்திரம் கிடைத்த பின் தேசீயக் கல்வியின் முக்கியத்துவத்தை மறந்தோம்.

கல்வியின் நோக்கம் என்ன? நாட்டிற்குப் பாடுபடக்கூடிய சுய நலமற்ற மக்களை உருவாக்குவதே கல்வியின் நோக்கம். தேசப்பிதா விரும்பிய ராம ராஜ்யம் ஏற்படுத்தவேண்டுமானுல், கல்வியின் மூலமே அதைச் செய்ய முடியும். நம் நாட்டினர் ஒற்றுமையுடன் காஷ்மீரிலிருந்து குமரிமுனை வரையில் யாரும் இந்தியர் என்ற ஒரு மனப்பான்மையுடன் மனுவலிமை, தேக வலிமை, ஆத்மீக சக்தி கூடிய மக்களாய், தேசாபிமானம், ததும்பும் மக்களாய் சுயநலமற்ற மக்களாய்த் திகழவேண்டுமானுல், கல்வி என்ற கருவியால்தான் செய்யமுடியும்.

கல்வி விஷயத்தில் தேசப்பிதா கவனம் செலுத்தத் தொடங்கியது இக்காரணத்தாலேயே. வருங்கால மக்கள் எளிய வாழ்க்கையும் உன்னதமான எண்ணங்களும் கொள்ளவேண்டுமானுல் ஆரம்பக் கல்வி கட்டத்தில் மாறுதல் தேவை. நவ நாகரீகம் என்ற பெயரால் தேவைகளை அதிகப்படுத்திக்கொண்டு நாட்டிற்குத் தேவையில்லாத பொருள்களைத் தேவையெனக் கருதி உபயோகப்படுத்திக்கொண்டு வரும் பழக்கம் நிற்கவேண்டும். பொருளாதார சுதந்திரம் சுய தேவைப் பூர்த்தியால் கிடைக்கக் கூடியது. சுயதேவைப் பூர்த்தி நாகரீகத்தால் பாதிக்கப்படுகிறது. நாகரீகம் பழக்க வழக்கங்களால் வளர்க்கப்படுகிறது. பழக்க வழக்கங்கள் சங்கத்திஞல் ஏற்படுகின்றன. சங்கம் என்பது பிற மனிதர்களுடன் பழகுவது மட்டுமல்ல. பிற கருத்துக்களை அறிவதும்கூட. கருத்துக்கள் புத்தகங்கள், படங்கள் மூலம் வெகுவாக வெளியாகின்றன. நடத்தை என்ற கட்டிடம் சங்கம் என்ற மண்ணைக் கொண்டு செய்யப்பட்ட பழக்கம் என்ற கல்லால் கட்டப்படும் கட்டிடம். நடத்தையென்ற இக்கட்டிடம் நன்ருக இருக்க வேண்டுமானுல், மண் என்ற சங்கம் நல்லதாக இருக்கவேண்டும். இந்த நல்ல சங்கத்தை உண்டுபண்ணுவதுதான் ஆசிரியர் வேலை. அது அடிப்படையாகச் செய்யுமிடம்தான் ஆரம்பப் பள்ளி.

ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் வேலை எவ்வளவு முக்கியமென்றும், நாட்டின் வருங்கால மக்களே அவர் கையில் இருக்கிருர்கள் என்பதும் இதிலிருந்து புலப்படுகிறது. இளம் வயதில் வளையாதது பின்னுல் வளையாது. சிறு வயதில் ஏற்படாத நல்ல பழக்கம் பின்னுல் ஏற்படாது. அப்படிப்பட்ட நல்ல பழக்கங்கள் ஏற்படுத்தும்படி நம் பாட திட்டம் அமையவேண்டும். அந்த அமுல் நடத்த ஆசிரியருக்குப் பூர்ண சுதந்திரம் கிடைக்கவேண்டும். அப்படிப்பட்ட திட்டம் மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப வருடத்திற்குள்ளாவது வகுக்கப்படவேண்டும்.

வரவேற்கிறோம்

ரிடையராகும் வயதாகி, மறுபடியும் ஆசிரியர் வேலை பார்ப்பவர்களின் குழந்தைகளுக்கும் கல்விச் சலுகை உண்டு என்ற சர்க்கார் உத்திரவை வரவேற்கிறோம். இச்சலுகை ரிடையராகி ஓய்வெடுத்துக்கொள்ளும் காலத்திலும் கொடுக்கப்படவேண்டிய நியாயம் உண்டு. குறைந்த சம்பளத்திலிருந்து ரிடையராகிறவர்கள் ஆசிரியர்கள். அவர்களின் வேலை செய்த இலாகாவோ கல்வி இலாகா. அப்படியிருக்க, வாழ்நாள் பூராவும் கல்வி இலாகாவுக்குத் தொண்டு செய்த ஆசிரியர், ஆயிரக் கணக்கான குழந்தைகளுக்குக் கல்வி புகட்டிய ஆசிரியர், தன் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டாத நிலைக்கு வருவது நியாயமல்ல. அதேபோல், ரிடையராகும் வயதுக்குமுன் இறந்துபோகும் ஆசிரியர் குழந்தைகளுக்கும் சலுகை தேவை.

சர்வீஸ் ரிஜிஸ்தர் சம்பளம்

சர்வீஸ் ரிஜிஸ்தர்படிசம்பளம் கொடுக்க முடியாது; சர்க்கார் விகிதப்படிதான் கொடுக்க முடியும் என்ற சர்க்கார் உத்திரவு வந்துள்ளது. இவ்வுத்திரவு 1-6-1959ல் சம்பளம் வசூலிக்காத பள்ளிகளாக மாறிய உதவிபெறும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப் பொருத்தது. இவ்வாசிரியர்கள் மானேஜ்மெண்டு மூலம் மாதந்தோறும் கையெழுத்திட்டு, சர்வீஸ் ரிஜிஸ்தரில் பதிவு செய்யப்பட்டு, சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் ஒப்பப்பட்டு, வாங்கி வந்த சம்பளம் 1-6-1959 முதல் குறைக்கப்பட்டது. நேரடிச் சம்பளம் பட்டுவாடா அமுலில் வந்த காலத்தில் சர்வீஸ் ரிஜிஸ்தர் சம்பளம் ஒப்புக்கொள்ளப்படவில்லை. சர்வீஸ் ரிஜிஸ்தர் சர்க்கார் உத்திரவு படி, சர்க்கார் அங்கீகரித்த முறையில், சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் ஒப்பப்பட்டு வந்த ஒரு முக்கிய ரிக்கார்டு. அதைச் சர்க்காரே அங்கீகாரஞ் செய்ய முடியாதென்பது சரியல்ல. வாங்கி வந்த சம்பளம் சர்க்கார் ஸ்கேலுக்கு அதிகமாயிருந்தால், அதிகமான தொகையை Personal Pay ஆகக் கொடுக்கவேண்டிய நியாயமுண்டு. அப்படிக் கொடுத்து அதன்படி 31-5-1960 அவர்கள் வாங்க வேண்டிய சம்பளத்தின் பேரில் சம்பளக் கமிஷன் சிபார்சுகளைக் கணக்கிடுவதே நியாயம்.

மணியார்டர் கமிஷன்

ஒரு வருஷ காலமாகப் பிடிக்கப்பட்ட மணியார்டர் கமிஷன் திருப்பித் தரப்படுமென்ற ஒரு நம்பிக்கை இருந்து வந்தது. இதுவும்இல்லையென இப்பொழுது உத்திரவிடப்பட்டிருக்கிறது. சில ஆயிரம் ஆகக்கூடிய இச்செலவை சர்க்கார் ஏற்கத் தயங்க வேண்டியதில்லை.

வேலை நிரந்தரம்

உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கட்கு வேலை நிரந்தரம் இல்லை. ஒவ்வொரு வருடமும் மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் நோட்டீசு பெறுபவர்கள் அனேகர். எந்த வேலையிலும் வேலை நிரந்தரத்திற்கு சர்க்கார் வழி செய்து வருகிறார்கள். ஆனால், ஆசிரியர் விஷயத்தில் வழி செய்யப்படவில்லை.

இது காரணமாகப் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வருடா வருடம் பாதிக்கப்படுகின்றன. ஒரு ஆசிரியரை நோட்டீசு கொடுத்து வெளியனுப்புவது அவர் குடும்பத்தைப் பட்டினியில் ஆழ்த்துவதாகும். மறு வேலை கிடைக்கும் வரையில் அக்குடும்பம் கஷ்டப்படுகிறது. மறு வேலை கிடைத்தாலும், முன் வாங்கிய சம்பளம் கிடைப்பதில்லை. ஆகவே, நோட்டீசு முறை, பட்டினியையும் சம்பளக் குறைவையும் உண்டாக்குகிறது.

ஒரு ஆசிரியர் தொடர்ந்து ஒரு பள்ளியிலிருப்பதால், எல்லோருக்கும் நன்மை. குழந்தைகளுக்குத் தொடர்ச்சியான கல்வி கிடைக்கிறது. கல்வி என்பது குழந்தைகளின் இயற்கை சக்திகளையறிந்து புகட்டவேண்டியதென்பதை ஒப்புக்கொண்டால் தொடர்ச்சியான ஆசிரியரின் முக்கியத்துவம் விளங்கும்.

ஆசிரியர்கள் நோட்டீஸ் கொடுத்து அனுப்பப்படுவதில்லையென்ற பெயர் வாங்கிய பள்ளிகளின் மதிப்பே மதிப்பு. பொது ஜனக் கண்ணில் இப்பள்ளிகள் உயர்வடைகின்றன.

பெற்றோர்கள் தொடர்ந்து ஒரே பள்ளியில் சேவை செய்யக்கூடிய ஆசிரியர்களிடம் உயர்ந்த நம்பிக்கைகொள்ளுகிறார்கள். அடுத்தடுத்த தம் வீட்டுக் குழந்தைகளை அதே ஆசிரியர்களிடம்

ஒப்புவிக்க விரும்புகிறார்கள். அப்படிப் பட்ட நம்பிக்கை ஆசிரிய சமுதாயத்திற்கு மதிப்பைக்கொடுக்கிறது.

ஆசிரியரும் ஒரே பள்ளியில் வேலை செய்தால், தன் பள்ளி போல் கருதும் உணர்ச்சி அவருக்கு ஏற்படுகிறது. தன்னை மறந்து வேலை செய்யக்கூடிய இத்தொண்டில் இவ்வித உணர்ச்சி அதிக ஊக்கத்தைக் கொடுக்கிறது.

யாவருக்கும் நன்மையளிக்கக்கூடிய இந்த ஆசிரியர் வேலை நிரந்தரத்தைச் சட்டபூர்வமாக சர்க்கார் செய்திருக்க வேண்டும். இப்பொழுதாவது இயற்றப் போகும் ஆரம்பக் கல்விச் சட்டத்தில் இதற்கு சர்க்கார் வழி வகுப்பார்களென நம்புகிறோம். இவ்விஷயத்தில் சர்க்காருக்குச் செலவு கிடையாது. ஆசிரியருக்கும் பாதுகாப்பு கிடைக்கிறது.

"பாரத நாட்டில் பாலர் கல்வி"

வித்வான். N. S. வைத்தியநாதன், எம். ஏ., பி. ஓ. எல்.,

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, மதராஸ்-17.

முன்னுரை

பார்முழுதும் புகழ்படைத்தது பாரத நன்னாடு. இப்பொன்னாட்டைப் பன்னெடுங்காலமாக அந்நியர் ஆட்சி புரிந்து வந்தனர். நாட்டு நலத்தில் நாட்டங் கொண்ட தன்னலமற்ற தியாகிகள் பலருடைய பெரு முயற்சியால் நாம் சுய ஆட்சி பெற்றோம். குடியரசு நாட்டில் அனைவரும் நல்வாழ்வு வாழவேண்டும் என்பதே நம் எல்லோருடைய குறிக்கோளுமாகும். ஒருநாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் கல்வி, கைத்தொழில், கலாசாரம் இவற்றை ஒட்டியே அமையும். "கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லாதவர்" என்று தமிழ் மறை முழங்குகின்றது. அத்தகைய கல்வியின் தற்கால நிலை குறித்துச் சிறிது சிந்திப்போம்.

அனைவருக்கும் கல்வி

" இருளே உலகத்தியற்கை
இருளகற்றும் கைவிளக்கே
கற்ற அறிவுடைமை "

என்ற நல்லுரை கல்வியின் இன்றியமையாமையை எடுத்தியம்புகின்றது கட்டாய இலவச ஆரம்பக் கல்வியை (Free Compulsory Elementary Education) நடைமுறையில் கொண்டுவர வேண்டியது குடியரசு நாட்டின் தலையாய கடமையென்பதை நம் அரசியலார் நன்கு உணர்ந்துள்ளனர். கடந்த சில ஆண்டுகளில் கல்வி நிலை படிப்படியாக முன்னேற்றம் அடைந்து வரு[illegible]ண் கூடாகக் காண்கிறோம். சிறப்பாக ஆரம்பக் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். சிறந்த கட்டடத்தை அமைக்கவேண்டியவர் நல்ல அடித்தளம் (Foundation) அமைத்தல்போல உயரிய கல்வியை ஓங்கச் செய்ய மேலான ஆரம்பக் கல்வியை நம் பாலர்களுக்குக் கற்பித்தல் அவசியம். நன்கு தொடங்கப்பட்ட வினை பாதி முடிந்தாற்போல (Well begun is half done) என்ற பழமொழியை நாம் நன்கு அறிவோம்.

எத்தகைய கல்வி வேண்டும்?

நம் குழந்தைகளுக்கு எத்தகைய கல்வி தேவை? அரசியல் மாற்றத்திற்குத் தக்கபடியெல்லாம் கல்வித் திட்டத்தை மாற்றி அமைப்பது நல்லதல்ல. பாடத்திட்டம் அடிக்கடி மாறுதல் அடைதலின்றி நேரிய முறையில் அமையவேண்டும். நம் பாரத நாட்டில் பாலர்களுக்கு உயரிய பண்பாட்டை வளர்ப்பதும் சிறந்த ஒழுக்கத்தை நிலைக்கச் செய்வதுமான மேலான கல்வியே வேண்டும். நம் கல்விக் கொள்கைகளை நன்குணர்ந்த நிபுணர் குழு ஒன்றை (Expert Committee) நிறுவி பாடத்திட்டங்களை வகுக்கும் பொறுப்பை அதனிடம் ஒப்படைப்பது நல்லது.

ஆசிரியர் கடமை

கல்வி கற்பிப்பதில் ஆசிரியர் பொறுப்பு மகத்தானது. வருங்காலப் பிரஜைகளை

நன் முறையில் உருவாக்கும் கடமை ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பழங்கால குருகுலங்களில் மாணவர்கள் ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். சீடர்கள் குருவை வழிபட்டு பயபக்தியுடன் கல்வி கற்றனர். ஏகலைவன் போன்ற மாணவர்களை நினைக்கும்போது ஆசிரியர்களின் பெருமை நமக்கு நன்கு புலனாகும். எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்ற வாசகம் உண்மையாகின்றது. நல்லறிவு புகட்டும் நல்லாசிரியர் விளையாட்டு முறையிலும் (Play way) பின்பற்றல் முறையிலும் (Imitation) அரும் பெரும் உண்மைகளையும் மாணவர் அறிந்துகொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். கல்வி கற்பதில் மாணவர்களுக்குச் சிறந்த ஆர்வம் உண்டாகும்படிச் செய்யவேண்டும். கதை வாயிலாக நீதிகளைப் புகட்டுதல் பாலர்களுக்கு ஏற்றதாகும். செய்து கற்றல் முறையையும் (Learning by Doing) தக்க பருவத்தில் மேற்கொள்ளலாம். குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் கவர்ச்சியான போதனையை மேற்கொள்ளல் ஆசிரியரின் கடமையாகும்.

விவேகாநந்தர் கருத்து

ஒரு பெரிய பாத்திரத்தில் உள்ள தண்ணீரைச் சிறிது சிறிதாக எடுத்துக்கொடுத்தல் போன்று ஆசிரியர் தாம் சேகரித்து வைத்துள்ள சிறந்த கருத்துக்களை மாணவர்களுக்கு எடுத்துரைத்தல் உண்மையான கல்வியல்ல என்றும் மாணவர்கள் அரும்பெரும் உரிமைகளைத் தாமாகவே சிந்தித்துச் சீர்தூக்கி உணரும்படித் தூண்டுதலே ஆசிரியர் கடமை என்றும் கூறப்படுகிறது.

தெள்ளிய ஆலின் சிறு பழத் தொரு விதை தெளிநீர்க் கயத்து சிறு மீன் சினையினும் நுண்ணியது என்பதை நாம் அறிவோம். அம்மரத்தின் கீழ் மன்னர் தம் மாண்புறு படையுடன் தங்கும்படி நிழலளிக்கும் அப்பெரு மரத்தைத் தோற்றுவித்தது அச்சிறு விதையே. விதைக்கு அத்தகைய அபாரமான சக்தி இருப்பதுபோல் மாணவர்களிடத்தும் மேலான கருத்துக்கள் இருக்கக்கூடும். அதைத் தட்டியெழுப்பத் துவங்கச் செய்வதே (Response to Stimulus) சிறந்த கற்பித்தல் முறையாகும் என்பதே விவேகாநந்தரின் அறிவுரையாம்.

முடிவுரை

ஆகவே கற்க வேண்டிய நூல்களைக் கசடறக் கற்கவேண்டும். அதன் பின் அதற்குத் தக நிற்கவேண்டும் என்ற வள்ளுவர் வாய்மொழியைப் பின்பற்றி நம் சிறுர்கள் உயரிய கல்வியைக் கற்று உன்னதமான வாழ்வு வாழ நாம் எல்லாம் வல்ல இறைவனைப் போற்றி வழிபடுவோம்.

ஆரம்ப ஆசிரியர்களிடமிருந்து

கல்விக் கட்டுரைகள் தேவை

அனுப்ப வேண்டிய விலாசம்:—

Journal Secretary,

S. I. T. U. OFFICE,

MADRAS-28.

கதா காலக்ஷேபம்

தெனாலி ராமன்

V. R. சுப்பிரமணியன்

(Head Master, A. C. C. Factory Ele. School, Madukkarai.)

ஆதாரக் கல்வி பாணியில் செயல்படும் நாம், பள்ளி பாலர் சபையில் இதை ஓர் நிகழ்ச்சி யாக அமைக்கலாம்.

'திமிகிட திமிகிட வாச மிருதங்க
பிரம்மா தாளஹரி கஜானனம்
தாண்டவ நித்யஹரி கஜானனம்'
(தாண்டவ)

'பலபீமா பலபீமா அபார தவகுண
மஹிமா ஜெய ஜெய பலபீமா' (பலபீமா)

ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே தேவ லோகத்தில் தேவர்கள் சபையில் இந்திரன் வீற்றிருக்க, இந்திரன் பிரம்மாவைப் பார்த்து, ஹே ! பிரம்மன், உனக்கு மட்டும் ஏன் நான்கு வாய்? அமிருதம் அதிகம் சாப்பிடவா என்று கேட்க, பிரம்மா பிரபோ, அதற்காக இல்லை. நான் ஓயாமல் ருக், யஜுர், சாம, அதர்வண வேதங்களை என் நான்கு வாய்களாலும் ஓதிக்கொண்டிருக்கிறேன் என்று சொல்ல, தேவர்கள் சரி சற்று நேரம் அதை நிறுத்திவிட்டு எங்களுக்கு ஓர் கதை சொல்லும் என்று கேட்டார்கள். பிரம்மனும் சம்மதித்து

'ரகுபதி ராகவ ராஜாராம் பதீதபாவன
சீதாராம்
கதை, கதை யெனவே தெனாலிராம்
தெனாலிராம் ஹரே தெனாலிராம்'

என்று ஆரம்பித்தார். பூலோகத்தில் பரத கண்டம் என்று ஒன்றுண்டு. அதில் ஆந்திர நாடு என்பது தென் பகுதியில் உள்ளது. அது ஒரு பெரிய நாடு. நன்னாடு, புண்ணிய நதிகள் பாயும் நாடு. 'ஆந்திர நாடு அரிசி யுடைத்து' என்பது பழமொழி. அதில் தெனாலி என்பது ஒரு பட்டணம். அங்கு பிராம்மண குலத்தில் ராமன் என்றொருவன் அவதரித்தான். அவன் மகா புத்திசாலி. வித்தைகள் பல கற்றான். தினமும் இரவில் படுக்கப் போகுமுன் காளியை ஸ்தோத்திரம் செய்வான்

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—பரா சக்தி
(ஓம் சக்தி)

(3 தடவை பாடுவது—பாரதிப் பாட்டு)

ஒரு நாள் இரவு காளி பிரசன்ன மானாள். பத்து தலை, பத்து மூக்கு, இருபது கைகள், பயங்கர தோற்றம், ஆனால் ராமன் அதைப்பார்த்து ஹெ. ஹெ....ஹெ என்று சிரித்தான். காளிக்கோ கோபம் ஒரு புறம், ஆச்சரியம் ஒரு புறம். அவனைப் பார்த்து

(நந்தா உனக்கிந்த மதி வந்ததென்னடா என்ற மெட்டு)

'அடே ராமா உனக்கிந்த மதி வந்த
தென்னடா
வந்த தென்னடா, வந்த தென்னடா,'

என்று கோபமாக சூலத்தை ஓங்கினாள். தெனாலி ராமனா அதற்கு பயப்படுகிறவன். உடனே தைரியமாக

('ஆறுதல் சினமே லக்ஷ்மணா' என்ற மெட்டு)

'ஆறுதல் சினமே அன்றோ காளியே
ஆத்திரப் படல் நன்றோ'

என்று கேட்டான். காளி, சரி, ஆத்திரப்படவில்லை. சிரித்த காரணம் சொல் என்றாள். உடனே ராமன்,

('எப்படிப் பாடினரோ' என்ற மெட்டு)

எப்படி சொல்வேனோ அடியேன்
இத்தனை மூக்கிலும் சளி பிடித்தால் ஐயோ
(எப்படி)

இந்த ஒரு மூக்கிலே எனக்கு 'ஜலப்' பிடித்துக்கொண்டால்—அது என்ன ஜலப் என்கிறீர்களா? அதுதான் ஜல தோஷத்திற்கு வேறு பெயர்—என்னல் தாங்க முடிவதில்லை. எத்தனையோ Kerchief, எவ்வளவோ Medicine, உனக்கோ இத்தனை மூக்குஇருக்கிறதே, 'ஜலப்' வந்தால் எத்தனை மூட்டை Kerchief, எத்தனை வண்டி மருந்து, என்ன அவஸ்தைப்படுவாயோ என் பதை நினைக்க சிரிப்பு என்னல் தாங்க முடியவில்லை என்ருன். அதைக்கேட்ட காளி "Oh! I see, அடே, ராமா! நீ ஒரு பலே பேர் வழி. என் பயங்கர சொரூபத்தைக் கண்டும் பயப்படவில்லை. உன் தைரியத்தையும் உன் விகடத்தையும் நான் மெச்சுகிறேன். உனக்கு 'விகட கவி' என்ற திருநாமம் சூட்டுகிறேன். இன்று முதல் உன்னை உலகோர் விகட கவி தெனலி ராமன் என்று அழைப்பர். நீ சுக ஜீவியாக வாழ்" என்று ஆசீர்வதித்து மறைந்தாள்.

ஸ்ரீராமசந்திரனுக்கு ஜெய மங்களம்
தெனலி ராமனுக்கு சுப மங்களம்
விகட கவி ராமனுக்கு வெற்றி மங்களம்
விரும்பி கதை கேட்டவர்க்கு நித்ய மங்களம்

ம...ங்...க...ள...ம்

'THE SOUTH INDIAN TEACHER'

மாதாந்திரப் பத்திரிகை

வாசித்தீர்களா?

திரு. G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C.,

எழுதுகிருர்

நமது வாசகர்களுக்கு:—

வேலையிலிருந்து நீக்கப்பட்டால், முழு விவரத்துடன் அடியிற் கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கவும்:—

SRI M. GANESAN,
Convener,
Vigilance Committee,
Board High School, **MELUR,**
(Madurai Dt.)

குருளையர் வாழ்க்கைச் சிறப்பு

R. V. Sarma, Hindu High School, Madras-5

சாரண இயக்கம் 1907-ல் இங்கிலாந்து தேசத்தில் 'ராபர்ட் பேடன் பவல்' என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வியக்கம் ஒன்றுதான் உலகிலேயே என்றும் அழியாமல் எல்லோராலும் பாராட்டப்பட்டு உலகமெங்கும் நிலைத்து நிற்கின்றது. சாரணர்களின் முக்கியக் கொள்கை, "எப்பொழுதும் தயாராக இரு." இதன் கருத்து தம்மாலான சேவையைச் செய்ய சாரணர் ஒவ்வொருவரும் தயாராக இருக்கவேண்டும் என்பதே. இவ்வியக்கம் மூன்று வகைப்படும். சிறுவர்களுக்கான இயக்கத்திற்குக் 'குருளையர் இயக்கம்' என்று பெயர். இதில் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பங்கெடுத்துக்கொள்வர். இவர்கள் 'குருளையர்' எனப்படுவர். 12-வயதுக்கு மேற்பட்டோர் 'சாரணர்' எனப்படுவர். 18 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்கள் 'திரிசாரணர்' எனப்படுவர். இப்பிரிவுகளில் மிக முக்கியமானது 'குருளையர்' பகுதியே ஆகும். இளம் வயதிலேயே ஒவ்வொரு குருளையனும் 'நாட்டுப் பற்று,' 'கடவுள் பக்தி', 'சகோதர அன்பு' முதலிய நற்பண்புகளைப் பெறுகின்றான். மாணவர்களுக்கு இளமையில் கொடுக்கும் பயிற்சி அவர்களுடைய வாழ்க்கைக்குச் சிறந்த அஸ்திவாரம்போல் அமைகின்றது. இவ்விள வயதிலேயே குருளையர்களுக்கு விளையாட்டுக்கள், சின்னஞ்சிறு கதைகள், ஆடல், பாடல்கள் மூலமாக ஒற்றுமை, நாடு, ஜாதி, நிறம் ஆகிய வித்தியாசமின்மை, அடக்கம், ஒழுக்கம், தன்னம்பிக்கை, முதலியன புகட்டப்படுகின்றன. பிற்காலத்தில் சாரணப் பணியை நன்கு ஆற்றுவதற்கான பயிற்சி இளம் வயதிலேயே பெற முடிகின்றது. குருளையர்களுடைய சட்டமும், வாக்குறுதியும், இவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்துள்ளன. தினம் யாருக்காவது ஒரு தன்னால் இயன்றவரை உதவி செய்வதாகவும், சட்டத்திற்குக் கீழ்ப் படிந்து நடப்பதாகவும் உறுதி மொழி எடுத்துக் கொள்ளுகிறான். தான் மேற்கொண்ட பணியில் எவ்வித இடையூறு ஏற்படினும் அதை இடையே விட்டு விடாமல் முடித்தல் வேண்டும் என்றும், (தலைவர்களுக்கு) பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும் என்றும் இவர்கள் சட்டம் வற்புறுத்துகின்றது. நிற்க, வனக்கூத்து, பாடி வாழ்க்கை (camp), நடனங்கள், நாடகம் நடித்தல், முதலியவைகளில் இவர்கள் பெறும் பயிற்சி இவர்களது அறிவை வளர்ப்பதுடன், கற்பனைத் திறன், தன்னடக்கம், ஒத்துழைப்பு, முதலிய சிறந்த குணங்களுக்கு அடிகோலுகின்றது. சைகை செய்தல், கைவேலை, நெருப்பு மூட்டல், செய்தியனுப்புதல், கயிறு தாண்டுதல், சிக்கனம், வீட்டு சேவை, முதலியவற்றிலும், ஒரு குருளையன் பயிற்சி பெற்று அதற்கான பயிற்சிச் சின்னங்களும் பெறுகிறான். இத்தகைய பயிற்சி பெற்ற குருளையர்கள் பின்னர், சாரணர், திரிசாரணர் என்று மெல்ல உயர்ந்து வாழ்க்கையில் நலம் பெறுகின்றான். கடைசி வரையில் சாரண இயக்கத்துடன் தொடர்பு கொண்டவனாகவே இருக்கின்றான்.

என்னே! குருளையர்களின் வாழ்க்கைச் சிறப்பு!

GOVERNMENT ORDERS

GOVERNMENT OF MADRAS

Department of Education and Public Health

(EDUCATION)

Withdrawal from Provident Fund for Payment of insurance premia.

G.O. Ms. No. 970, Education, dated 12th May 1960.

S.R.O. No. C-101 of 1960.

The following shall be added as note No. (3) under rule 12(c) (i) of the rules relating to Provident Fund of teachers in non-pensionable service—

"In the case of teachers for whom insurance is compulsory under the pension rules, 1958 and who are thrown out of employment; the District Educational Officer may, in deserving cases, permit the necessary withdrawal for the purpose of payment of the insurance premia, following the procedure and subject to the conditions laid down in this rule. The teacher should submit his application for withdrawal through the correspondent of the institution in which he served last as subscriber".

K. V. RAMANATHAN,
Deputy Secretary to Government.

(True Copy)

Amendments to Madras Teachers' Contributory Provident Fund-Insurance-Pension Rules.

G.O. Ms. No. 991, Education, dated 16th May 1960.

S.R.O. No. C-102 of 1960.

Rule (2) of Madras Teachers' Contributory Provident Fund-Insurance-Pension Rule, 1958, shall be recast as below :—

(1) *Rule* (2).—These rules shall apply to the following cases of teachers employed in recognized Elementary Schools, Secondary Schools including Post-Basic Schools and Training and Special Schools (Nursery, Montessory, Kindergarten and Pre-Basic Schools), Oriental Schools and schools for handicapped children and Anglo-Indian *Schools, run by Aided Managements,* Municipal Councils, District Boards and Panchayats.

(2) Category II under the rule (2) of the Rules shall be as indicated below :—

"Category II—Secondary Schools including Post-Basic Schools."

K. SRINIVASAN,
Secretary to Government.

(True Copy)

EDUCATION AND PUBLIC HEALTH DEPARTMENT

Memorandum No. 50648 E5/60-2, Education, dated 17th June, 1960

Sub : Education — Educational concessions to children of Non-Gazetted Officers and others — Applicability to the children of employees who are retired from service but re-employed—Orders passed.

Ref : G.O. No. 1250 Education, dated 31-5-'52. Govt. Memo No. 37063-D/53-3, Education, dated 19-10-'53. G.O. Ms. No. 966 Education, dated 14-5-'58.

In continuation of the orders issued in Memorandum No. 37063-D/53-3, Education, dated 19-10-'53, the Government direct that the educational concessions admissible under G.O. Ms. No. 966 Education, dated 14-5-'58, be granted to the children of Non-gazetted Officers, teachers and others who have retired from service but are re-employed after retirement.

K. V. RAMANATHAN,
Deputy Secretary to Government.

(True Copy)

GOVERNMENT ORDERS

EDUCATION AND PUBLIC HEALTH DEPARTMENT

G.O. Ms. No. 1641 Education, dated 28th July 1960.

ABSTRACT

EDUCATION — Elementary — Abolition of levy of fees — Payment of excess over pay admissible in Government service and refund of money order commission already deducted — Orders passed.

READ:

G.O. Ms. No. 739, Education, dated 11-4-1959.

G.O. Ms. No. 1383, Education, dated 29-6-1959.

From the Sri Ramakrishna Mission Elementary School Teachers' Association, T'Nagar, letter dated 25-4-1959.

From the Director of Public Instruction No. 940 (A) B7/58 dated 18-6-'59, 28-8-'59, 20-1-'60 and 26-2-'60.

ORDER:

In G.O. Ms. No. 739 Education dated 11-4-1959, the Government issued orders to the effect that fee levying elementary schools which decided to change over to non-fee levying, would be paid full teaching grant as usual but that in respect of schools which paid their teachers at rates higher than the approved scales of pay, the teaching grant would be assessed on the basis of the actual pay of the teachers or pay calculated on the scale of pay admissible in Government service, whichever was less. In G.O. No. 1383 Education dated 29-6-1959 Government approved the proposals that the salaries due to the teachers might be disbursed by money order and that the money order commission might be deducted from the salaries of the teachers.

2. Representations have been received that in the case of certain teachers, the actual pay drawn by them was in excess of the pay admissible in Government Service and that in such cases the actual salary drawn by the teachers might be sanctioned. Representations have also been received that the Money Order commission should not be deducted from the salaries of the teachers and that the Money Order commission already deducted should be refunded.

3. The Government have considered these requests in consultation with the Director of Public Instruction and have decided that the excess over the pay admissible in Government service need not be paid. The direct payment system has been given up from June 1960. The Government have also decided that the Money Order commission already deducted from the salaries of teachers need not be refunded.

4. This order issues with the concurrence of the Finance Department— Vide their U.O. No. 54311 E1/60-1 dated 23-6-1960.

(By order of the Governor)

K. V. RAMANATHAN,
Deputy Secretary to Government.

(True Copy)

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri G. Krishnamurthi, M.L.C. & Published by Sri S. D. Krishnamurthi Rao, B. A., L. T., for the S. I. T. U., at Rajah Annamalaipuram, Madras-28.

Regd. No. M. 3473
Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடத்திட்டத்தை அனுசரித்து எழுதியவை

1—5-ம் வகுப்புகளுக்குரியவை

பொங்கல் தமிழ் வாசகம்

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	37	ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40	„
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	50	„
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	65	„
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	85	„

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	40	ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40	„

லீலாவதி சுலப கணிதம்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	90	ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 00	

நவீன சுலப கணிதம்

முதல் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 25	

நவீன சமூக வரலாறு

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	45	ந.பை
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	75	„

புது முறை சமூக வரலாறு

முதல் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 12	
இரண்டாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 90	

நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40	ந.பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	40	„
மூன்றும் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	80	„

கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	60	ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	60	„
மூன்றும் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	60	„

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1